| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Register Number | | | | | | |

# தமிழ் - இரண்டாம் தாள்
# Language – Part A – TAMIL – Paper II

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : i) கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.

ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

iii) கட்டுரைகள் முன்னுரை, பொருளுரை மற்றும் முடிவுரைகளைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

I. எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் விடை தருக : 5 × 1 = 5

1. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.

   செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக.

2. மாமல்லபுரச் சிற்பங்கள் அழகாக உள்ளன.

   உணர்ச்சி வாக்கியமாக மாற்றுக.

3. மகாத்மா காந்தியடிகளை அனைவரும் அறிவர்.

   வினா வாக்கியமாக மாற்றுக.

4. பாவை பாடம் படித்தாள்.

   பிறவினையாக்குக.

5. போட்டியில் சிலர்தான் வெற்றி பெற முடியும்.

   எதிர்மறை வாக்கியமாக மாற்றுக.

[ Turn over

6. குமணன், ''நான் நாளை சென்னை செல்வேன்'' என்று இரமணனிடம் கூறினான்.

அயற்கூற்று வாக்கியமாக மாற்றுக.

7. கண்ணன் நன்கு படித்தான், முதல் மதிப்பெண் பெற்றான்.

கலவை வாக்கியமாக மாற்றுக.

II. கீழ்க்காணும் வினாக்கள் அனைத்திற்கும் விடையளி : 5 × 1 =

8. அ) *வாழையடி வாழையாய்*

ஆ) தாயைக் கண்ட சேயைப் போல

இ) பேரும் புகழும்.

- ஏதேனும் ஒன்றினுக்கு மட்டும் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

9. வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக :

தலைக்குத் தலகாணி கொண்டா.

10. மரபு பிழை நீக்கி எழுதுக :

கிளி கீச்சிட ஆந்தை உறுமும்.

11. பிறமொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக :

பஜாரில் கூட்டம் குறைவாக இருப்பது அபூர்வம்.

12. ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறிகளை இடுக :

அடடா இசை கேளாத செவிகளா இவை இசை நுகராத செவிகட்கு என் பாட இனிக்காதே

III. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக : 3 × 2 =

13. பகுபத உறுப்பிலக்கணம் தருக. ( **ஒன்றனுக்கு** மட்டும் )

அ) முடித்த ஆ) நிறுத்தினார்.

14. பிரித்தெழுதுக :

அ) பெருநாள் ஆ) நயந்தளித்தல்.

15. இன்றியமையாத இலக்கணக் குறிப்பு தருக : ( **இரண்டனுக்கு** மட்டும் )

அ) அசைவிலா ஊக்கம்

ஆ) பழங்குடி

இ) அருமையே அருமையே.

IV. கீழ்க்காணும் வினாக்களுக்குரிய விடையைத் தெரிந்து எழுதுக : 20 × 1 = 20

16. முதலெழுத்துகள் மொத்தம்

அ) பன்னிரண்டு ஆ) பதினெட்டு

இ) முப்பது ஈ) இருநூற்றுப் பதினாறு.

17. பொதுமொழிக்கு எடுத்துக்காட்டு

அ) நிலம் ஆ) தாமரை

இ) சாலச் சிறந்தது ஈ) மனிதன்.

18. கடைக்குச் சென்று வருவாயா ? என்னும் வினாவிற்குச் 'செல்வேன்' என்பது

அ) மறை விடை ஆ) நேர் விடை

இ) ஏவல் விடை ஈ) உறுவது கூறல் விடை.

19. வாழ்த்துதல், வைதல், வேண்டல், விதித்தல் ஆகிய பொருள்களில் வருவது

அ) ஏவல் வினைமுற்று ஆ) குறிப்பு வினைமுற்று

இ) தெரிநிலை வினைமுற்று ஈ) வியங்கோள் வினைமுற்று.

20. குறிஞ்சி நிலத்திற்குரிய பெரும் பொழுது

அ) குளிர்காலம், முன்பனிக் காலம் ஆ) இளவேனிற் காலம்

இ) கார் காலம் ஈ) ஆறு பெரும்பொழுதுகளும்.

21. பகைவர் நாட்டுப் பசுக் கூட்டங்களைக் கவர்ந்து வருவது

அ) கரந்தை ஆ) வஞ்சி

இ) வெட்சி ஈ) காஞ்சி.

22. நேரசை என்பது

அ) நெடில் குறில் இணைந்து வருவது

ஆ) குறிலிணை ஒற்றடுத்து வருவது

இ) குறில், நெடில் தனித்து வருவது

ஈ) குறில், நெடில் இணைந்து வருவது.

23. இரண்டடி முதல் பன்னிரண்டு அடிகள் வரை பெற்று வருவது

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா

இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா.

24. 'கத்துங் குயிலோசை' என்றன்

காதில் விழ வேண்டும்' என்பது

அ) பால் வழுவமைதி ஆ) மரபு வழுவமைதி

இ) இட வழுவமைதி ஈ) கால வழுவமைதி.

25. முற்று வினை எத்தனை வகைப்படும் ?

அ) ஒன்று ஆ) இரண்டு

இ) மூன்று ஈ) நான்கு.

26. ஔகாரம் மொழிக்கு ........................ மட்டுமே குறைந்து ஒலிக்கும்.

27. செய்பவன், கருவி, நிலம், செயல், ........................ செய்பொருள் என்ற ஆறினையும் உணர்த்துவது தெரிநிலை வினைமுற்று.

28. 'பாம்பு பாம்பு' என்பது

அ) உவகை ஆ) அச்சம்

இ) வெகுளி ஈ) நகை.

29. கடலும் கடல் சார்ந்த இடமும் ........................ நிலமாகும்.

30. செய்யுளில் உவம உருபு மறைந்து வருவது ........................ அணியாகும்.

31. பொருத்துக :

அ) தெரிநிலைப் பெயரெச்சம் — அழகிய மலர்

ஆ) குறிப்புப் பெயரெச்சம் — படித்த மாணவன்

— நல்ல மாணவன்.

32. பொருத்துக :

அ) போருக்குச் செல்லல் — உழிஞை

ஆ) கோட்டையை முற்றுகையிடல் — வஞ்சி

— வாகை.

33. காய் முன் நேர் வருவது ........................ தளையாகும்.

34 புத்தகக் கடைக்குச் சென்று 'பத்தாம் வகுப்புத் தமிழ்ப் புத்தகம் உள்ளதோ ?' என்று வினவுவது

அ) அறிவினா ஆ) அறியா வினா

இ) ஐய வினா ஈ) கொளல் வினா.

35. ஆசிரியர் 'நன்று நன்று' எனப் பாராட்டினார்.

அ) அடுக்குத் தொடர்

ஆ) இரட்டைக் கிளவி

இ) ஒருபொருட் பன்மொழி.

V. அ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஆறனுக்கு** மட்டும் விடையளி :

$6 \times 2 = 12$

36. சார்பெழுத்து எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

37. ஆய்தக் குறுக்கமாவது யாது ? விளக்குக.

38. மூவகை மொழிகளை விளக்குக.

39. வழு என்றால் என்ன ? வகைகளை எழுதுக.

40. ஒருபொருட் பன்மொழியை விளக்குக.

41. எதிர்கால வினையெச்ச வாய்பாடுகள் எவை ?

42. வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

43. வினாவிற்குக் குறிப்பால் உணர்த்தும் விடை வகைகள் யாவை ?

ஆ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஆறனுக்கு** மட்டும் விடையளி :

$6 \times 2 = 12$

44. கருங்கூந்தல் - புணர்ச்சி விதி கூறுக.

45. சிறு பொழுதுகள் எத்தனை ? அவை யாவை ?

46. புறத்திணைகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

47. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

48. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்

நீங்கின் அதனைப் பிற.

\- இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியைச் சுட்டுக.

49. தற்குறிப்பேற்றணி ( அல்லது ) வஞ்சப் புகழ்ச்சி அணியை விளக்குக.

50. கீழ்க்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக :

நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்தின்

பகையும் உளவோ பிற.

VI. 51. கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருள் உணர்ந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக : $5 \times 2 = 10$

நீதிநெறி வழுவாமல் நிற்க வேண்டும்

நெஞ்சார உண்மைதனைப் பேச வேண்டும்

ஓதிமறை உயர்ந்தவரை மதிக்க வேண்டும்

ஒப்பற்ற ஆசான் சொல் கேட்க வேண்டும்

ஆதியிலே வாழ்ந்த முறை நினைக்க வேண்டும்

ஆபத்தில் உற்றவர்க்கு உதவ வேண்டும்

சோதிவடி வானவனைச் சொல்ல வேண்டும்

சுகம் பெறவே வாயார வாழ்த்த வேண்டும்.

*வினாக்கள்:*

i) எந்நெறியில் நிற்க வேண்டும் ?

ii) உண்மையை எங்ஙனம் பேச வேண்டும் ?

iii) யாரை மதிக்க வேண்டும் ?

iv) யார் சொல்லைக் கேட்க வேண்டும் ?

v) இப்பாடலுக்கு ஏற்ற தலைப்பு ஒன்று தருக.

VII. 52. நீ சென்று வந்த சுற்றுலா பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் வரைக. 1 × 10 = 10

*அல்லது*

நும் ஊரில் சுகாதார வசதிக்கான கழிப்பறை கட்டித் தருமாறு மாவட்ட ஆட்சியர்க்கு விண்ணப்பம் வரைக.

VIII. 53. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்று** குறித்து ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : 1 × 10 = 10

அ) மழைநீர் சேமிப்பு

ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் பங்கு

இ) தேசிய ஒருமைப்பாடு.

IX. 54. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்றனுக்கு** மட்டும் ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : 1 × 10 = 10

அ) சத்தியமா கதையில் வரும் இரமணனின் பண்புநலன்கள்

ஆ) பாகப் பிரிவினைக்கு முன்னரும் பின்னரும் நிம்மாண்டு நாயக்கரின் வாழ்க்கை

இ) விடிவதற்குள்..... கதையில் வரும் பங்கஜத்தின் குணநலன்கள்

ஈ) வேலை(ளை) வந்துவிட்டது என்ற கதையில் வரும் ரகு வேலை தேடிய விதம்.